# திருநறையூர் நம்பி

# மேகவிடுதூது.

இது

மதுரைத் தமிழ்ச்சங்கத்துச்

"செந்தமிழ்" உதவிப்பத்திராதிபர்

இராமாநுஜையங்காரால்

பரிசோதிக்கப்பெற்றது.

செந்தமிழ்ப் பிரசுரம்—௪௫

மதுரைத்

தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1921.

ஸ்ரீ:

# முகவுரை.

---

அமிழ்தினுமினிய தமிழ்மொழியகத்தே அகப்பொருளும் புறப்பொருளும்பற்றி ஆன்றோரா லழகுபெறப் பாடப்பட்ட பிரபந்தங்களும் அனந்தமே. அவற்றுள் தூதுப்பிரபந்தங்களு மடங்கும்.

மேகவிடுதூது என்பது மேகமாகிய விடுதூதையுடையதென விரி மன்மொழித்தொகையாய்ப் பிரபந்தத்துக்குப் பெயராயிற்று. மேகத்தைத் தூதுவிட்ட விருத்தாந்தமுடையதென்பது கருத்து.

திருநறையூர்நம்பி மேகவிடுதூது என்னுமிது, 'காமப்பகுதிகடவுளும்வரையார்' என்ற விதிப்படி, திருநறையூரிலே கோயில்கொண்டெழுந்தருளியுள்ள நம்பியிடத்து மால்கொண்ட ஒரு தலைவி, அவரிடத்தே தன் ஆற்றாமையைத் தெரிவித்து அவரணிந்த திருத்துழாய்மாலையை வாங்கிவரும்படி மேகத்தைத் தூதுவிடும் விருத்தாந்தத்தை விடயமாக வைத்து மிகவும் நயமுடையதாகப் பாடப்பட்டிருப்பதொரு கலிவெண்பாட்டு.

திருநறையூர் என்பது சோழநாட்டுத்திருப்பதியுள் ஒன்று. சோழன் கோச்செங்கணான், நம்பியைப்பணிந்து சேரபாண்டியர்களை வெல்லுதற்கு வெற்றிவாள்பெற்ற தலம் இது. இன்னும், இதன் மான்மியமெல்லாம் இந்நூலின் 60-முதல் 140-வரையுள்ள கண்ணிகளால் விளங்கும்.

இப்பாட்டின் முதலிலுள்ள "போதுமணவாளனங்கு" என்னுஞ் செய்யுளால் இது திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்காரால் இயற்றப்பட்டதென்று தெரிகிறது. ஆழ்வாராசார்யர்களைப் பின்பற்றி அவர்கள் மங்களாசாசனம்செய்துபோந்த திவ்யதேசங்களுக்கெல்லாம் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியும் அவற்றுட்சிறந்த கோயில், திருமலை, திருமாலிருஞ்சோலைமலை என்ற மூன்று திவ்யதேசங்களுக்கும் முறையே திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக்கலம்பகம், திருவரங்கத்துமாலை; திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி; அழகரந்தாதி என்ற பிரபந்தங்களும் அருளிச்செய்த திவ்யகவி, ஆழ்வார்களுள், "மாறன்பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கங்கூறவவதரித்த" திருமங்கைமன்னனைப் பின்பற்றி

அதிகமாக எடுப்பட்டுப் பல இருப்பதில் இவ்வாறுள்ளதை மடலியற்றிய நூல் ஆசிரியர் திருப்பாட்டுடையிற்றினை எனப்படுவது பொருத்த மென்று தோன்றுகிறது.

மேலும், இப்பாட்டு 'சொல்லுக்கும்பொருளுக்குந்தொடைநோக்கு நோக்குந்துறையினுக்கோடெந்நோக்குங்காண இலக்கியமா' யமைந் திருப்பதும்,

"கேசவனையேசெவிகளகேட்கதிருவரங்கத
தீசனையேசென்னியிறைஞ்சிடுக—நேசமுடன்
கண்ணனையே காண்கவிருகண்ணிணார்கொள்காயாம்பூ
வண்ணனையேவாழ்த்துகவென்வாய்"

ற திருவரங்கக்கலம்பகசெய்யுளோடொப்ப இப்பாட்டின் 192-முதல் வரையுள்ள கண்ணிகள் அமைந்திருப்பதும், இதிற் பலவிடத்தும் டப்பிரபந்தநடையோடொத்த நடை விரவிவருவதும் அவ்வாறு ர்வதற் காதாரமாகும்.

இப்பாட்டு இருநூறுகண்ணிகளாற் பல அரியவிஷயங்களை விளக்கி க சரிதங்களும், மடக்கு, முரண், உவமை, பின்வருநிலை, சிலே முதலிய பல அணிகளும் உடையதாய்ப் படிப்பவர்க்கு மிக்க இனி யுடையதாகவும் எளிதிற் பொருள்விளங்குவதாகவும், கற்போர்க்குச் யுள் செய்யுந்திறமையை உண்டாக்க வல்லதாகவும் இயற்றப்பட்டிருக் து.

இப்பிரபந்தம் இதற்குமுன் அச்சிடப்பெற்றிருப்பினும், பிரதிகள் டைத்தற்கரிதாயிருப்பது பற்றிக் குறிப்புரையுடன் இப்பொழுது செந் ழ்ப்பிரசுரமாக வெளியிடப்பட்டது.

இதை யச்சிட்டதிற் சிற்றறிவுடைய என்னால் ஏற்பட்ட பிழைகளை ஞர்கள் பொறுத்துத் திருத்தியளிக்குமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

இராமாநுஜையங்கார்,

உதவிப்பத்திராதிபர்,

செந்தமிழ்.

ஸ்ரீ:

# திருநறையூர் நம்பி மேகவிடுதூது.

## தனியன்.

### நேரிசைவெண்பா.

போதுமணை வாளணங்கு புல்லுநறை யூர்நம்பி
மீதுமணை வாளருண் மேகவிடு—தூதுதனைச்
சொல்லுவார் கேட்பார் துதிப்பாரிம் மேதினிமேல்
வெல்லுவா ரெல்லாம் விரைந்து.

## காப்பு.

### நம்மாழ்வார்.

நாரணனை யெவ்வுயிர்க்கு நாயகனை யண்டரண்ட
பூரணனை நாகணையிற் புண்ணியனை—வாரணமுன்
வந்தானை யேத்து மறையா யிரந்தமிழாற்
றந்தானை நெஞ்சே நரி.

### திருமங்கையாழ்வார்.

நாட்டியசீர்த் தென்னறையூர் நம்பி திருவடிக்கே
சூட்டியதோர் மேகவிடு தூதுக்குக்—கூட்டம்
பொலியன்ப ரேத்தும் புனலாலி நாடன்
கலியன் பரகாலன் காப்பு.

# நூல்.

## கலிவெண்பா.

1 சீர்கொண்ட செங்கமலச் செல்வத் திருமகளு
நீர்கொண்ட வேலை நிலமகளு—மேர்கொண்ட

2 வார்தண் மணிக்கடகக் கையா லடிவருடப்
பார்தண் மணிச்சுடிகைப் பாயன்மேற்—சேர்ந்துறங்குஞ்

3 செங்கண்மா லுந்தித் திருத்தா மரைப்பிறந்த
வெங்கண்மா ஞாலத் தனைத்துயிர்க்குந—தங்காமும்

4 மாரி வழங்குதன் மாறுமே கைம்மாறு
காரிய மென்று கருதாமே—பாரிற்

5 றுளிக்கின்ற தண்ணந் துளியமுத நல்கி
யளிக்கின்ற கொண்மூ வரசே—களிக்கின்ற

6 மேலுலக மேறி விரிஞ்சநா மம்படைத்து
நாலு திசைமுகமு நண்ணுதலான்—மாலுமா

7 நீலநிற மாகி நிறைகமலக் கண்ணுகிக்
கோல வளையாழி கொள்கையாற்—சூலம்

---

க முதல் கரு—கண்ணிவரை மேகத்தின்சிறப்புக் கூறப்படுகிறது.

2. கடகம்-வளை. பாந்தள்-பாம்பு. சுடிகை-தலை.

3. உந்தி-கொப்பூழ். தங்கா-தங்கி.

5. கொண்மூ, புயல், கொண்டல், மேகம், மஞ்சு, மங்குல், கனம், எழிலி, பயோதரம், விண், கார், கந்தரம், மாரி என்பன ஒருபொருட் சொற்கள்.

6. இது முதல் மூன்று கண்ணிகளால் முறையே பிரும்ம விஷ்ணு, ருத்திரர்க்கும் மேகத்துக்குஞ் சிலேடை கூறப்படுகின்றது. அவற்றுள், பிரமனுக்கும் மேகத்துக்குஞ் சிலேடைவருமாறு:—

மேலுலகமேறி-1. சத்தியலோகத்தையடைந்து, 2. ஆகாயமாகிய இடத்தையடைந்து. விரிஞ்சநாமம் படைத்து—1. விரிஞ்சன் என்னும்பெயரையடைந்து, 2. பாந்த அச்சத்தை விளைக்கக்கூடிய கடல்நீரைக்கொண்டு. நாலுதிசைமுகமு நண்ணுதலால்—1. நான்குதிக்கிலுமுகத்தையுடைமையால்; 2. நான்கு திக்கிலுஞ் செல்லுதலால்.

7. திருமாலுக்கும் மேகத்துக்குஞ் சிலேடை. மாலும்-மயக்கத்தைச்செய்கின்ற. மா-பெருமைமிக்க.

நிறைகமலக் கண்ணுகி-1. தாமரைப் புஷ்பம்போன்ற ஆயிரம் கண்களையுடையனாய், 2. மிக்கநீரைத் தன்னிடத்தே கொண்டதாய். கோலவளையாழி கொள்கையால்-1. அழகிய சங்கு சக்கரங்களைத் தரித்தலால், 2. அழகிய சங்குகளையுடைய (அல்லது உலகைச் சூழ்கின்ற) கடலையுட்கொள்ளுதலால்,

8 விரவிய பாணியாய் மின்னையிடந் தாங்கி
யரவ மணியு மழகால்—வரமளிக்கு

9 மெத்தே வருக்கு மிறைவராய் மேலாய
முத்தே வருநிகரா மூர்த்தியே—மைத்தகன்ற

10 வானத்து ளேபிறந்து வானத்து ளேதவழ்ந்து
வானத்து ளேவளரும் வானமே—வானத்து

11 வேலைவாய் நீரருந்தி வெற்பி லாசிருந்து
சோலைவாய்க் கண்படுக்குந் தோன்றலே—ஞாலமிசைத்

12 தானமு மெய்யுந் தருமமுங் கல்வியு
மானமுந் தானமு மாதவமு—நானக்

13 கருங்கொண்டை மங்கையர்தங் கற்புநிலை நிற்ப
தருங்கொண்ட லேயுனைக்கொண் டன்றோ—நெருங்குமுவ

14 ராழிநீர் துய்ய வமுதநீ ரானதுவும
வாழிநீ யுண்ட வளமன்றோ—தாழுமடி

15 யாவுஞ்சிந் தாமணியு மம்புயமுஞ் சங்கமுங்
காவும பணியவுயர் கார்வேந்தே—நாவினுற்

---

8. சிவனுக்கும் மேகத்துக்குஞ் சிலேடை. சூலம் விரவியபாணியாய்-1. சூலாயுதம் பொருந்திய கையையுடையவனாய்,2.சூற்கொண்ட நீருடன் கூடிய அழகுடையதாய். மின்—1. பார்வதி,2. மின்னல். இடந்தாங்கி-1.இடபாகத்தேகொண்டு, 2. தன்னிடத்தே கொண்டு. அரவம்-1. பாம்பு, 2. ஓசை.

9. படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலு மியற்றற்குரிய எல்லா வன்மையுமுடைய நின்னிற் சிறந்தா ரொருவருமில்லை யென்பது குறிப்பு.

10. இது சொற்பொருட் பின்வருநிலை. வானத்துளே வளரும் வானம் என்றது முரண்விளைந்தழிந்த வியப்பு. வானத்துவேலை-பெரிய சங்கினையுடைய கடல்.

11. கண்படுத்தல் — உறங்குதல். (இது குறிப்புமொழி)

12. நானம்—கத்தூரி.

14. பிறரா லமுதநீருண்ணப்படினும் அது ஆழிநீர்போ லுவராவதாக நீ யாழிநீரையுண்ணினும் அது அமுத நீராக வெளிவிடுதலால் யான்சொல்லு மவற்றுள்ள குற்றங்களை நீக்கிக் குண முடையனவாகக் கூறவல்லை என்பது குறிப்பு. பிறவும் இங்ஙனமே காண்க.

15. ஆ-காமதேனு. அம்புயம், சங்கு என்பவை இங்குப் பதுமநிதி, சங்கநிதிகளை யுணர்த்திவந்தன. கா—கற்பகச் சோலை. கொடையான் மிக்க இவை பணியும்படியுயர்தல்—தன்னை அவைகளும் விரும்பி எதிர்பார்க்கும்படியான கொடையான்மிகுதல்.

16 சாதகமுந் தோகைத் தனிமயிலும் போலவே
மேதகையை நின்வரவை வேட்டிருந்தேன்—பூதலத்துப்

17 பல்லுயிருங் காக்கப் பரமா மெனக்கெனது
புல்லுயிருங் காக்கிற் புகழன்றோ—வல்லதொரு

18 சீருயிரு மேகமே செங்கண்மாற் காளானே
னாருயிரு மேகமே யல்லவோ—பேரவ

19 நீலமஞ்சே கேட்டியா னின்னையல்லா தென்னையிந்தக்
காலமஞ்சே லென்பாரைக் காண்கிலேன்—ஞாலமறு

20 விண்மாரி யெம்பெருமான் வேரித் துழாய்வேட்டேன்
கண்மாரி பெய்வதெல்லாங் கண்டாயே—தண்மை

21 விளையும் பயோதரமே வெம்பாத செம்பொ
னிளையும் பயோதரமே யானேன்—கிளைபிரியாக்

22 கோல மழையே குயின்மா ரனையந்திக்
கால மழையாமே காப்பாரார்—நீல நிற

23 மங்குலுக்கு வெந்தே மலர்க்கண் புதைத்தனைய
கங்குலுக்கு நெஞ்சங் கரைகின்றே—னிங்கு

24 நடந்தகன மேமுலையி னாலுந் தரள
வடந்தகன மேசெய்து மாயத்தேன்—விடந்திரண்ட

25 திங்களெழி லிக்குச் சிலைமார வேண்மூனியி
லெங்களெழி லிக்கரசே யெனசெய்கேன்—மங்கலமா

---

16. மேதகையை-முன்னிலைவினை மேம்பட்டதகுதியையுடையோய் என்பது பொருள். வேட்டல்-விரும்புதல்

17. பரம்-பொறுப்பு. இது முதல் உன ஆங் கண்ணிவரை தலைவி மேகத்தை நோக்கித் தனது எளிமை கூறுகின்றாள்.

18. சீருயிரும்-சிறப்பா னுயர்தலையுடைய. அ க ர ம் தொடை நோக்கி இகரமாய்த் திரிந்துநின்றது. முதல் அடியில் மேகமென்றும் இரண்டாமடியில் ஏகம் என்றும் பிரிக்க. ஏகம்-ஒன்று

20 வேரி—வாசனை

21 பயோதரம்-1 மேகம்,2 தனம். வெம்பாதசெம்பொன்-தேமல்.

23. கங்குல்—இரவு.

24. நாலுதல்—தொங்குதல். தரளவடம்—முத்துமாலை. தகனம்செய்து-எரித்து.

25. எழில் இக்குச்சிலை—அழகிய கரும்புவில். மாரவேள்—மன்மதன்.

26 யிந்திரவில் வாங்கி யெழுகின்ற மைப்புயலே
வந்திரவில் வாடை வருத்துங்காண்—அந்தரத்து

27 விண்ணே யுனக்கிவற்றை விண்டுரைத்தே னல்லாதெ
னுண்ணேய வேட்கையெவர்க் கோதுவேன்—கண்ணழலால்

28 வெந்தா னிலத்துக்கும் வீறுகத் தாங்குகையான்
மந்தா னிலத்துக்கும் வாய்திறவே—னந்தக்

29 குருத்தத்தை மாரன் குரகதமா மென்றே
வருத்தத்தை யங்குரைக்க மாட்டேன்—கருத்துள்ள

30 மாதண் டலைவாய் மதுகரத்துக் கும்மவன்றன்
கோதண்ட நாணென்று கூறேனன்—மூதண்ட

31 கோளக் குயிற்கெல்லாங் கோவே யவமாறனது
காளக் குயிற்குங் கழறேனா—னொன்றி

32 லன்புறா வுக்கு மரசனுட லீர்வித்த
புன்புறா வுக்கும புகன்றிடேன்—மென்புரத்துக்

33 கோம்பிக் குடல்பணிக்குங் கொச்சைமட மஞ்ஞைக்குஞ்
சோம்பித் தளர்ந்து துயர்பணியேன்—றேம்பிரச

34 நிற்கின்ற பூவைக்கு நீள்குழலார் சொல்லியதே
கற்கின்ற பூவைக்குங் கட்டுரையேன்—பொற்கால்

---

26. இந்திரவில்—வானவில் வாடை இரவில் வந்து வருத்து மெனக் கூட்டுக.

27. வேட்கை—காதன்மிகுதி.

28. இதுமுதல் 36 வரை யுள்ள கண்ணிகளாற் றென்றல், கிளி முதலியன தூதுசெல்லத் தக்கனவல்லவென்று தலைவி கூறுகிறாள். கண்ணழலால் வெந்தான்—மன்மதன். நிலத்துக்கும்-பூமியில் பொடியாயுதிர்ந்துவீழ்ந்தும். வீறுக—வன்மையடையும்படி. (இறந்தொழிந்த மன்மதனும் இயங்கும்படி) தாங்குகையால்—தேராயிருந்து தாங்குதலால். மந்தானிலம்-தென்றற்காற்று.

29. குருத் தத்தை-நிறத்தையுடைய கிளி. மாரன்-மன்மதன். குரகதம்—குதிரை.

30. தண்டலை—சோலை. மதுகரம்—வண்டு. கோதண்டநாண்-வின்னாண்.

31. குயின்—மேகம். காளம்—சிறுச்சின்னம் கழறுதல்-சொல்லுதல். நான் ஒன்றில்-ஒருகாலத்தில்.

32. அன்புறு-அன்புற்று. உக்கும்-மனம் கரையும். அரசன்-இங்கு சிபிச்சக்கரவர்த்தி. உடல்-சரீரம். ஈர்வித்த—அறுக்கச் செய்த. புகலுதல் - சொல்லுதல் மென்புரம்-மெல்லியவுடல்.

33. *பணித்தல்-நடுங்குதல். கொச்சை-இழிவு. மஞ்ஞை-மயில். பணித்தல்-சொல்லுதல். தேம்பிரசம்-இனியதேன்.

34. பூவைக்கும்-பூச்சூடிய. பூவை-நாகணவாய்ப்புள். கட்டுரைத்தல்-சொல்லுதல்.

35 வெறிப்பதுமம் விட்டன்னம் வெண்பாலு நீரும்
பிறிப்பதுபோ லெட்டுப் பிறிக்கும்—குறிப்பறிந்து

36 காதலா னுள்ளக் கவலை யதுகேட்க
வோதலா காதென் னுரையாடே—மாதலா

37 னுள்ளே புழுங்குவ தன்றி யொருவருக்கும்
விள்ளே னுனக்கு விளம்பினேன்—றெள்ளியநா

38 லோதுவா ரெல்லா முதவுவார்க் கொப்புரைக்க
வேதுவாய் நின்ற வெழிலியே—பூதலத்துப்

39 பெய்யுதவி யும்புரிந்தாற் பேச்சுதவி யுஞ்சிறிது
மெய்யுதவி யும்புரிய வேண்டாவோ—துய்ய

40 அடலாழி யானடிக்கே யன்பாய காதற்
கடலாழி மூழ்கினேன் கண்டா—யுடல்வாடி

41 விம்முகிலே சந்தாக மீளத் திருமால்பான்
மைம்முகிலே சந்தாக மாட்டாயோ—மெய்ம்மதவேள்

42 தண்ணப்பஞ் செய்வதெலாந் தாமோ தரனடிக்கீழ்
விண்ணப்பஞ் செய்தருள வேண்டாவோ—வெண்ணத்தின்

43 சீதரனை நீயிரந்து தெய்வத் துழாய்கொணர்ந்தெ
னாதரவு தீர்த்தருள லாகாதோ—கேதகைக்கு

44 மின்கேள்வ னாக்கியநீ விண்ணோர் பெருமானை
யென்கேள்வ னாக்கிடு வேலாதோ—முன்கேட்டு

35. வெறி-வாசனை. பதுமம்-தாமரை. அன்னம், பாலையும் நீரையும் பிரித்தருந்துமென்பது கவிமரபு. இது "நீர் பிரித்தமிர் துணுநீர்மையினேனிமம் - ஓரிருபான்மைக் குவமையதாகும்" என மாறனலங்காரத்துள்ளும், "பாலிருந்த நீர் பிரிப்பீர்" என அழகர்கலம்பகத்துள்ளும் பயின்றுள்ளது.

38 முதல் 51 வரையுள்ள கண்ணிகளால், மேகத்தினிடமமைந்த தூது சொல்லற்குரிய தகுதி விளக்கப்படுகிறது.

38. ஆதலால் நீ எனக்குத் தவறாது தூதுவாயென்பது குறிப்பு.

39. பேச்சுதவி - தூதுசொல்லல். மெய்யுதவி-சரீரவுபகாரம்; அது தூது செல்லல்.

40. அடல்—வலி. ஆழி-சக்கரம். கடலாழி இருபெயரொட்டுப்பண்புத் தொகை. ஆழ்கடல் என்பது பொருள்.

41. விம்மு கிலேசம்—அதிகரித்த கவலை. சந்து-தூது. மதவேள்-மன்மதன்.

42. தண் அப்பு அஞ்சு எய்வது—குளிர்ந்த (புஷ்ப) பாணங்களைந்தையும் எய்வது. விண்ணப்பம் செய்தல்-சொல்லுதல். வெண்ணத்தின் சீதரன்-வெள்ளிய சங்கத்தினையுடைய திருமால்.

43. கொணர்ந்து - கொண்டுவந்து. ஆதரவு-விருப்பம். கேதகை - தாழை.

44. கேள்வன்-கணவன்.

45 மௌளியந் தாமம் மெனக்குதவா யேலுனக்கு
வள்ளலெனு நாமம் வழுவாதோ—தெள்ளுநுடன்

46 ஞாலத் துளவமே நல்விளமை போகாமற்
கோலத் துளவமே கொண்டுதவாய்—சீலத்தா

47 லூனா யுடலா யுறுதுணையாய்த் தெய்வமா
யானா மருந்தாயென் னாருயிரா—யானாத

48 நெஞ்சமாய்க் கண்ணாய் நினைவாய் வினையேற்குத்
தஞ்சமாய் நின்ற தனிமுதலே—பஞ்சவர்க்காய்

49 மெய்த்தூது சென்றவரை வெல்லவே வெண்சங்கம்
வைத்தூது செங்கமல மாயோன்பா—லித்தூது

50 நல்லதெனக் காரே நடந்தருள வேண்டுநீ
யல்லதெனக் காரே யருள்செய்வார்—சொல்லித்

51 தருதுமெனக் கந்தரமே சாற்றாயே லுய்யக்
கருதுமெனக் கந்தரமே கண்டாய்—பெரிது

52 மெனைத்தோன்றி யோதுயர மெய்தினார் பார்மே
லுனைத்தோன்றி யோதா துழன்றார்—நினைததார்

53 தமது பிறப்பறுக்குந் தாயாகி மேனா
ளமுதிற் பிறந்தாள்பா லன்றோ—நமது

54 கருமஞ் சனையவற்காய்க் காய்கதிரைப் பாய்ந்து
பொருமஞ் சனைசிறுவன் போனான்—றாணிதனின்

---

45. தாமம்—மாலை.

46. ஞாலம்-உலகம். அவம்-வீண். கோலம்-அழகு. துளவம்-திருத்துழாய் உதவுதல்-கொடுத்தல். சீலம்-தூய்மை.

48. தஞ்சம்—புகலிடம்.

50. நல்லதெனக் காரே எனவும், அல்லது எனக்கு ஆரே எனவும் பிரிக்க.

51. கந்தரமே! "சொல்லித் தருதும்" எனச் சாற்றாயேல் உய்யக்கருதும் எனக்கு அந்தரமே எனக் கூட்டுக. கந்தரம்—மேகம். தருதும்—தனித்தன்மைப்பன்மை. அந்தரம்-முடிவு.

52. முதல் 57 வரையுள்ள கண்ணிகளால், தலைவி மேகத்தை நோக்கித் தூதுசெல்லுதல் இழிவாகக்கருதப் படாது தொன்றுதொட்டு உயர்வாக மதிக்கப்பட்டதென்று சரித்திர ஆதாரங்கொண்டு விளக்கி அதைத் திருநறையூர்நம்பியிடம் தூது சென்றுவரும்படி வேண்டுகிறாள்.

53. அமுதிற்பிறந்தாள் என்பது இங்கு சீதையையுணர்த்திற்று.

54. கருமஞ்சு அனையவன்—கரிய மேகம்போலு மிராமன். காய்கதிர்-சூரியன். அஞ்சனை சிறுவன் - அனுமன். தரணி-பூமி.

55 மீது பரவை விடமுண் டவனன்றோ
மாது பரவை மனைவந்தா—னாதலா

56 லோது மிவரி லுயர்ந்தோ ரிலையன்றே
தூதுபுரிந் தோரைத் தொகுத்துரைத்தேன்—ஆதலாற்

57 றேனின் புறத்தூது தெய்வத் துளவினன்பால்
யானின் புறத்தூ தெழுந்தருளாய்—வானிற்

58 றிவலை பிலிற்றிவரு தெய்வமே நீயென்
கவலையறத் தூதுபோங் காலைக்—குவலயத்தி

59 லெம்பிரா னூரு மவர்பெயரு மெற்பயின்ற
தம்பிரான் செய்தமையுஞ் சாற்றக்கேள்—உம்பரிற்

60 பன்னிருவர் மானறேர்ப் பரிதிக் கடவுளரு
மன்னிருவர் தெய்வ மருத்துவரு—மொன்னலரைப்

61 பாயும் விடையர் பதினொருவ ருந்திசையிற்
காயுங் கடாயானைக் காவலருந்—தூயகதிர்

62 வெண்ணிலா விட்டு விளங்குங் கலாமதியு
மெண்ணிலாத் தாரகையி னீட்டமுங்—கண்ணி

63 லருட்டருமா ஞானத் தருந்தவர் நாகர்
தெருட்டரும விஞ்சையர் சித்தர்—கருட

64 ராக்க ரியக்க ரவுணர் முதலோர்
பரக்குங் கணங்கள் பலரும்—பெருக்கமு

65 நீரேழு மேழு நினது பெருங்கணமும்
பாரேழு மேழு பருப்பதமு—மீரே

66 ழடுக்கும் புவனமு மாடகமால் வெற்பு
மெடுக்கு மரவரசு மெல்லாந்—தொடுக்கத்தால்

---

55. பரவை-1. கடல், 2. பரவை நாச்சியார்.

57 தேன் இன் புறத்து ஊது எனவும், யான் இன்புறத் தூது எனவும் பிரித்துப் பொருள்கொள்க.

58. திவலை-துளி. பிலிற்றி-துளித்து. குவலயம்-பூமி.

59. முதல் 133 வரையுள்ள கண்ணிகளால் தலைவி, தான்விரும்பிய தலைவனது ஊரும், பெயரும், சிறப்பும், பிறவும் தலவரலாறு மாகியவற்றைக் கூறுகிறாள்

60. ஒன்னலர்-பகைவர்

62. தாரகை-விண்மீன். ஈட்டம்-கூட்டம்.

63. தெருள்-தெளிவு.

66. ஆடகமால்வெற்பு—மகமேரு. அரவரசு-ஆதிசேடன்.

67 முண்டக நாபி முளைக்குஞ் சதுமுகனோ
டண்ட வளாக மடங்கலுங்கண்—கண்டளித்து

68 முன்னிய வண்ண முடித்து விளையாடுந்
தன்னிகரில் லாத தனிமுதல்வன்—துன்னமாய்

69 மீனாகி யாமையாய் வெள்ளேன மாய்மடங்கன்
மானாகி மாணியாய் வாமனமாய்—ஆனாத

70 மானிடராய்ப் பாய்பரியாய் வாழு மடியவர்க்குத்
தானிடராற் றப்புகுந்த தம்பிரான்—மேனாளிற்

71 பைந்நாகப் பள்ளிமேற் பங்கயங்கள் பூத்தொளிரு
மைந்நாகம் போற்கண் வளருநாட்—பொன்னாய

72 வன்ன முளரி மலர்த்தவிசில் வீற்றிருக்கு
மன்ன முணர்த்தவுண ராமையா—லென்னையல்லா

73 லிந்நித் திரைமடந்தை யெய்தலுமா யிற்றோவென்
றுன்னித் திரைமடந்தை யூடினளா—வந்நிலையே

74 காயத்திரியுங் கலைமகள்சா வித்திரியு
மாயத் தெரிவையரா யாங்குவர—நேயத்தார்

75 கோலத்தாள் கைதொழுது கூறிலைய முக்கவட்டுச்
சூலத்தா ளேவற் றொழில்கேட்ப—ஞாலத்து

76 மானிட மங்கை வடிவாக வந்துறையுங்
கானிடம் யாதென்று கண்சாத்தி—யானு

77 நலமாகும் யோசனையோர் நாற்றிசையு முத்தித்
தலமாஞ் சுகந்தவனந் தன்னு—ளலமாற

---

67. முண்டகம்—தாமரை. நாபி—கொப்பூழ். சதுமுகன்-பிரமன்.

69. ஏனம்-பன்றி. மடங்கல்மான்-நரசிங்கம்.

70. இடர்-துன்பம்.

71. நாகப்பள்ளி-பாம்பணை. ஒளிர்தல்-விளங்குதல். மைந்நாகம்—நீலமலை.

72. வன்னம்-நிறம். தவிசு—ஆசனம். உணர்த்த-துயிலெழுப்ப.

73. நித்திரைமடந்தை — நித்திராதேவி. உன்னி—எண்ணி. திரைமடந்தை-இலக்குமி. ஊடினளாக என்பது ஊடினளா எனக் கடைக்குறையாயிற்று.

74. ஆயத்தெரிவையர்-பாங்கியர்.

75. கோலத் தாள்—அழகிய திருவடி. சூலத்தாள்-துர்க்கை.

76. கண்சாத்தி—பார்த்து.

77. அலம் மாற—பாவம் நீங்க.

78 வான்றிகழுஞ் சந்தைமுதன் மறைமொழி மார்பழியிற்
றோன்றியுறும் பக்கத் துவாதசியிற்—றோன்றிகழும்

79 கந்த வனையக் குடைந்தாட லானதிக்கு
வெந்தனென நாமம் விளம்பியே—பாய்ந்த

80 திருமணிமுத் தாறலைக்குந் தீரத்தி னின்ற
மருமருவு வஞ்சியின்கீழ் வைக—வருகாக

81 வானமே தாவி வளரு மகிழடியின்
ஞானமே தாவியெனு நன்முனிவன்—றானெய்திச்

82 செய்ய கமலத்துச் செய்யவளைக் கண்டுவந்தே
யையர் பயந்தெடுத்த வன்னையார்—துய்யவெய

83 ரூரே தெனப்பெயரு மூருமிலை தந்தைதாய்
நீரே யெனமுனிவ னெஞ்சுருகிப்—பாரேத்த

84 மன்னிள வஞ்சியின்கீழ் வந்துறைத லாற்பெயரு
மென்னிள வஞ்சியா ரென்றுரைத்த—தன்னுழையி

85 லான் வரமுனிவ னவ்வனத்துக் கொண்டிருப்ப
வானவர் தோலா வலிதோற்றுத்—தானவரால்

86 விண்ணா டிழந்து விரிஞ்சனொடு கூடயிடுநாட்
டண்ணார் துழாய்மா தவனுணர்ந்து—நண்ணார்

87 மிடைகெடுத்து மென்று விடைகொடுத்த பின்னர்க
கிடைகெடுத்த செந்துவர்வாய்க் கிள்ளை—யடைகொடுத்த

88 புண்டரிக மாளிகைமேற பூவை தணந்தமையு
மண்டரெலா மாற்ற லகன்றமையுங்—கண்டருளிச

89 செந்திருவை நாடுவான் றெய்வ வடிவகற்றி
யைந்துருவ மாகி யவனிமேல—வந்தருளி

---

78. முற்பக்கம்-சுக்கிலபக்ஷம்.
80. தீரம்-கரை. மருமருவு-வாசனை பொருந்திய. வஞ்சி-ஒரு மரம். அருகு-[illegible].
81. வானமே தாவி-ஆகாயத்தின் [illegible]. மகிழ்-வகுளமரம். மேதாவி-[illegible] ஒருமுனிவன்.
85. தானவர்—அசுரர்.
87. கிடை-செந்நெட்டி. துவர்-பவளம். கிள்ளை-கிளி. கிள்ளை, பூவை என்பன இங்கு ஆகுபெயராய் நின்று இலக்குமியை யுணர்த்தின.
88. தணத்தல்-பிரிதல். அண்டர்-தேவர்.
89. தெய்வவடிவு-அப்பிராக்ருதிக யசரீரம். ஐந்துருவம்-பஞ்சபூதமயமான மானிடசரீரம். அவனி-பூமி.

90 யாடற் பறவை யரச னவனியப்பு
தேடத் திசையளந்தான் சேவடியா—னீடுஞ்

91 சுகந்தவனை நோக்கித் துணையாய செல்வி
யுகந்தவன மீதென் றுணர்ந்து—புகுந்தருள

92 மேதாவி கண்டு விருந்தளிப்ப வெவ்வுயிர்க்கு
மாதாவி னல்லான் மகிழ்ந்ததற்பின்—போதார்

93 முருகுவளை மொய்குழலை முன்றிறனிற் கண்டு
பெருகுவளை முன்கை பிடிப்பத்—திருமகளுங்

94 காதலால் வந்தநம்பி கைப்பிடித்தா னென்றலறிக்
கோதிலா மாமுனியைக் கூவுதலும்—வேதியனுங்

95 கண்புகையச் செய்ய கதிர்புகையக் கார்வெளிற
விண்புகைய வாய்துடிப்ப மெய்பதற—மண்புகைய

96 வந்தான் கரகநீர் வாங்கிச் சபிப்பதற்கு
முந்தாமுன் சங்காழி முன்காட்டச்—சிந்தை

97 மயங்கினா னஞ்சினான் வாய்குழறிப் பார்மேன்
முயங்கினான் செங்கை முகிழ்த்தான்—றியங்கி

98 யழுதான் றுளவின்மா லஞ்சலென வானோர்
விழுதா மரைத்தாளில் வீழ்ந்து—முழுது

99 மறியாமை செய்தே னதுபொறுத்தி யென்ன
வெறியாழி யம்மா னிரங்கிச்—செறிதுழாய்க்

100 கோதை மணம்புணர்ந்த கொண்டலுமப் புண்டரிகை
மாதை மணம்புணர்ந்து வைகியபி—னீதி

101 யறந்திறம்பா நேமியா னவ்வனஞ்சேர் வைக்கும்
பிறந்தார்கள் வீடு பெறற்குஞ்—சிறந்தமலர்

---

90. ஆடல்-வலி. பறவையரசன்-கருடன்.

92-93. போது-பூ. முருகு-வாசனை. வளைதல்-சூழ்தல். மொய்குழல்-அடர்த்த கூந்தல், அது இங்கு அன்மொழித் தொகையாய் இலவஞ்சியாரை யுணர்த்திற்று. முன்றில்-முன்முற்றம்.

96. கரகம்—கமண்டலம்.

97. கைமுகிழ்த்தல்-கைகூப்புதல்.

100. கோதை-ஆண்டாள்.

101. அறந்திறம்பா நேமியான்—திருமால்.

102 மாமாதின் பேரோ வழங்குகைக்குங் கேட்டவர
மாமா தவனுக் கருளியபின்—பூமாதைப்

103 பாமாதுள் ளிட்டார் பணிந்துவிடை கொடுபோய்த்
தேமா மலரோன் செவிப்படுப்ப—நாம

104 மறையாள னவ்வனத்து வந்தரசி னீழன்
முறையாய வேள்வி முடித்துப்—பொறையார்ந்த

105 பாதார விந்தம் பணிந்தேத்தப் பாற்கடலிற்
சீதார விந்தத் திருவினொடும்—பூதலத்தோர்

106 பேறுபெற வேபஞ்ச பேர வடிவுகந்து
வீறுபெற மாமுனிக்கும் வீடருளிக்—கூறரிய

107 ஞாலத் தெழுபத்து நான்கு சதுரயுகம்
நீலத் தடவரைபோ னின்றபிரான்—மேலைச்

108 சிகரக் குடகிரியிற் சென்றிழிந்து கீழை
மகரக் கடல்வயிறு மட்டு—மகவிடத்திற்

109 பாரங் கிழித்துப் பரவி மதகிடறி
யாரஞ் சுருட்டி யகிலுருட்டி—நார

110 நுரையெறிந்து வித்துருமக் கொத்து நுடங்கத்
திரையெறிந்து முத்தஞ் சிதறிக்—கரையிற்

111 கொழிக்குங்கா வேரி குதித்தோடப் பாய்ந்து
சுழிக்குங்கா வேரித் துறையா—னெழிற்கருகி

112 யோங்கிப் பகலிருளை யுண்டாக்கி யேசுரும்பைத்
தாங்கிப் புயறடுத்த தண்டலையுந்—தேங்கமலப்

113 பூமிசை யன்னம் பொருந்தி வலம்புரியு
நேமியு மேந்திய நீள்கயமுங்—காம

---

103. தேம்-தேன். நாமம்-புகழ்.
104. பொறையார்ந்த — எல்லாவற்றையுந் தாங்கிய.
106. பேறு-சதுர்விதபுருஷார்த்தம்.
109. பாரம்—கரை. மதகு—மடை. இடறி-மோதி. ஆரம்-சந்தனம். நாரம்-நீர்.
110. வித்துருமக்கொத்து - பவளக்கொத்து. நுடங்க-அசைய.
111. சிதறி-சிதறப்பட்டு. கொழிக்குங் கா-கொழித்தற்கிடமாகியசோலை. வேரி-தேன்.
112. சுரும்பு—வண்டு.
113. வலம்புரி —ஒருவகைச்சங்கு. நேமி-சக்கரவாகப்பறவை. கயம்-தடாகம். காமர்-அழகு; மன்மதனுமாம்.

114 ளமகிழ வெண்ணிலா வொண்கதிரைக் கன்னல்
வளமதனை யீன்ற வயலு—மளவின்றித்

115 தன்னையே போலத் தழைப்பத் தரணிக்கோ
ரன்னையே போல வருள்செய்வான்—மன்னு

116 மருநறையூர் வீதி மணிமாடக் கோயிற்
றிருநறையூர் வாழ்வாசு தேவ—னிரணியனைப்

117 பாரி லுரங்கிழித்த பன்னகத்தான் பன்னகத்தான்
வாரிநிகர் வண்ணத்தான் வண்ணத்தா—னிடத்துந்

118 தண்ணளியான் றண்ணளியான் றாழ்ந்தவன சக்கரத்தான்;
கண்ணினழ கார்முகத்தான் கார்முகத்தான்—விண்ணுலகி

119 னல்லசுரர்க் கண்ணியா னானாய்க் கண்ணியான்
புல்லசுரர்க் குக்கொடியான் புட்கொடியான்—மெல்லிலங்கை

120 வஞ்சனை யங்கறுத்தான் வாய்ந்தவடி வங்கறுத்தான்
கஞ்சனைமுன் கண்சிவந்தான் கண்சிவந்தான்—றஞ்சுந்

121 திரையான் மலரிந் திரையான் கவிகை
வரையான் செழுந்து வரையான்—றங்கான

122 மங்கையான் வேதநிய மங்கையான் சென்னியிலோர்
கங்கையான் சூடியகாற் கங்கையான்—பங்கயக்கை

123 யாரணன் கேசவ னாழியா னச்சுதன்
காரண னெம்பெருமான் காகுத்த—னாரணன்

---

114. கன்னல்—கரும்பு.
115. தரணி—பூமி.
116. மருநறையூர்வீதி — வாசனை பொருந்தியதேன் ஒழுகுகின்ற தெரு.
117. பன்னகத்தான்—1. பலநகங்களையுடையான், 2. பாம்பை (அணையாக) உடையான். வாரி-கடல். வண்ணத்தான்—1. நிறத்தையுடையவன், 2. செழுமையான சங்கத்தையுடையவன்
118. அளி-1. கருணை, 2. வண்டு. வனசம்-தாமரை. கரம்-கை. 1. அழகு முகத்தான். 2. கார்முகத்தான்-வில்லையுடையான்.
119. நல்ல சுரர்க்கு அண்ணியான்-நல்லதேவர்களுக்குக் கிட்டுமவன். கண்ணி-தலைச்சூட்டு. புட்கொடி - கருடக்கொடி.
121. திரை-இங்கு, திருப்பாற்கடல். இந்திரை-இலக்குமி. வரைக்கவிகையான் எனக் கூட்டுக. வரை-கோவர்த்தனகிரி. கவிகை-குடை. செழுந்துவரையான்-செழுமையான துவாரபதியையுடையான்.
122. வேதநியமம் கையான்-வேதவிதிகளைவிரும்புமவன் (பிரமன்.) சென்னி, கம் என்பன தலையென்னும் பொருளையுணர்த்திநின்றன. கம் கையான்-தலையைக் கையிலுடையான், (சிவன்)

124 யாதவன் கண்ண னிருடிகே சன்முகுந்தன்
மாதவன் கோவிந்தன் வைகுந்தன்—சீதரன்

125 மாய னனந்தன் மதுசூத னன்றிருமா
லாயன் முராரி யருளாளன்—றூயகழற்

126 றேவாதி தேவன் றிருநா யகத்தேவன்
றூவா விடர்கெடுத்த தம்பிரா—ஞேவாப்

127 படந்திகழு மாடரவப் பாய்க்கிடந்து மேலா
மிடந்திகழ்வை குந்தத் திருந்து—நடந்து

128 பொறையூ ரடிக்கமலம் பூத்தோய வந்து
நறையூரு ணின்றருளு நம்பி—மறையூரு

129 மாயிரம் பேழ்வா யநந்தன் பணாடவிமேன்
மாயிரு ஞால மகிழ்ந்திறைஞ்சச்—சேயிருந்தா

130 ரண்டர் குழாமு மருந்தவ ரீட்டமுந்
தொண்டர் குழாமுந் தொழுதேத்தப்—பண்டைத்

131 திருவாய் மொழியுந் திருமொழியும் வேதாத்
தருவாய் மொழியுந் தழைப்ப—வொருவாத

132 திங்களு நாளுந் திருவிழா நின்றோங்க
மங்கல வெண்சங்கம் வாய்பிளிற—வங்கமர்ந்து

133 நன்பஞ்சேர் நாடகக்கா னம்பிக்கு நாயகித
னின்பஞ்சேர் நாளி லினிதொருநாள்—அன்பமர்ந்து

134 தன்னிசையாற் புள்வேந்தன் சாமவே தம்பாடு
மின்னிசையாற் பள்ளி யெழுந்தருளி—மன்னிச்

---

126. தாவாவிடர்-கெடாததுன்பம்.
127. திகழ்தல்-விளங்குதல்.
128. பூ-பூமி. தோய-படிய.
129. பேழ்வாய்-பெரியவாய். அநந்தன்-ஆதிசேடன். பணாடவி-படத்தொகுதி.
131. திருவாய்மொழி- நம்மாழ்வாரருளிச்செய்தது. திருமொழி-திருமங்கையாழ்வார் முதலியவர்களருளிச்செயல். வேதா-பிரமன். வாய்மொழி-வேதம்.
132. பிளிற-முழங்க.
134. முதல் 200வரையுள்ள கண்ணிகளால் தலைவி திருநறையூர்நம்பியை உலாவரும்போது கண்டு மையல்கொண்டமை கூறி அம்மையல் தீர அவரிடம் சென்று திருத்துழாய்மாலை வாங்கிவரும்படி மேகத்தை வேண்டுகிறாள்.

135 சிலம்புதிரை மோதுந் திருமணிமுத் தாற்றி
னலம்புதிரு மஞ்சனநீ ராடி—நலம்பரவு

136 சேலை கலைந்தணிந்து தெய்வப் பசுந்துளப
மாலை புதிய வகைசூடிக்—கோலந்

137 தயங்குதிரு வாரா தனைகொண்ட பின்ன
ரியங்குகடற் சங்க மிசைப்பப்—பெயர்ந்தோர்

138 திருந்துமணி மண்டபத்துச் சிங்கஞ் சுமந்த
வருந்தவிசி னேறி யருளிப்—பொருந்தியநால்

139 வேதமும் வேதாந்த மெய்த்ததிரு வாய்மொழியு
நாதமுங் கேட்டு நயந்துருகி—யோது

140 மருண வடவரையி னம்பொற் குவட்டிற்
றருண மவுலி தயங்கத்—திருநாம

141 மிட்ட வ்தனத் தெழுதிய கத்தூரி
வட்ட மதியின் மறுவேய்ப்பக்—கிட்டரிய

142 தேங்குழைக்கீழ்க் கற்பகத்திற் செம்பாம்பு சூழ்ந்ததெனப்
பூங்குழைக்கீழ் வாகு புரிதயங்கப்—பாங்கிற்

143 பதிக்குங் கவுத்துவமு மார்பும் பரிதி
யுதிக்கு மரகதக்குன் றொப்பக்—குதித்தொருநாட்

144 கால்வீழ்ந்த கங்கை விலங்கிக் கடிமார்பின்
மேல்வீழ்ந்த தென்னமுந் நூல் விட்டிலங்கச்—சூல்வீங்கு

145 கொண்டலின்கீழ்த் தோன்றுங் குடதிசையிற் செக்கரென
விண்டிலங்கு பொன்னுடை மெய்யசையத்—தொண்டரெலாம்

146 பற்றிக் கழலவிடாப் பாதார விந்தத்தின்
வெற்றிக் கழலின் வெயிலெறிக்க—மற்றுந்தான

---

135. சிலம்பு திரை — ஒலிக்கின்ற அலை.

139. நாதம்—இசை.

140. அருணம்-கருமைகலந்தசிவப்பு. தருணம்-புதுமை. மௌலி—கிரீடம்.

141. வதனம்—நெற்றி.

142. குழை- 1. தழை, 2. குண்டலம். வாகுபுரி-தோள்வளை.

143. பரிதி—இரவி.

144. கடி-விளக்கம். முந்நூல்-யஜ்ஞோபவீதம். சூல்-கருப்பம்.

145. குடதிசை-மேற்றிசை. செக்கர்-செவ்வானம்.

147 வேண்டும் பலகலைந்து மேகவடி விற்கேற்பப்
பூண்டு களபம் புயத்தணிந்து—நீண்டகடற்

148 பெண்ணு டையதன் பெரிய திருவடிவைக்
கண்ணாடி மண்டிலத்திற் கண்சாத்தி—வண்ணத்

149 திருமருங்குற் கேற்றதொரு சிற்றுடைவாள் வீக்கி
யிருமருங்கு மைம்படையு மேந்தித்—திருமறுகிற்

150 போதரலு நாற்கடலசூழ் பூதலத்தும் வானத்து
மாத ரரம்பையர்கள் வந்தீண்டிப்—பாதந்

151 தொழுவார் வளைகலைநாண் சோர்வார் மயலா
யழுவார் முலைபசலை யாவார்—குழுவாகி

152 யம்மாதர் நிற்ப வருவினையேன் கைதொழுதேன்
விம்மா வெதுமபா மெலிவானே—னெம்மானுக்

153 கென்னெஞ்ச மென்கலையு மென்னாணுஞ் சங்குமவன்
றன்னெஞ் சறியத் தனிதோற்றேன்—பின்னுமொரு

154 விண்ணப்ப முண்டென்று மெய்ந்நடுங்கிக் கைகூப்பி
வண்ணத் துகிலொதுக்கி வாய்புதைத்துக்—கண்ணுதலாம்

155 வீரன் சிலையிறுத்த வேந்தே வினைவிளைக்கு
மாரன் சிலையிறுக்க வாராதோ—பாரமலை

156 யன்றெடுத்த கையா லழல்வீ சியதென்றற்
குன்றெடுத்த போது குறையாமோ—நின்றெறிக்குஞ்

157 செய்ய கதிர்மறைத்த சீராழி யான்மதியின்
வெய்ய கதிர்மறைக்க வேண்டாவோ—கையமைத்து

---

147. கலன்-ஆபரணம். களபம்-சந்தனக்குழம்பு.

148. கடற்பெண்—இலக்குமி. நாடிய-விரும்பிய.

149. மருங்குல்-இடை. மருங்கு-பக்கம். வீக்கி-கட்டி. மறுகு-வீதி.

150. போதரல்-வரல். ஈண்டி-நெருங்கி.

151. கலை-உடை. மயல்-காமமயக்கம்.

155. பாரமலை-பெரியமலை. அது இங்குக் கோவர்த்தனத்தை யுணர்த்தும்.

156. தென்றற்குன்று - தென்றல் பிறப்பதற்கிடமாகிய பொதியமலை.

158 முன்னநீ வாயடக்கு முந்நீரை யென்பொருட்டா
பின்னநீ வாயடக்கி லேலாதோ—பன்னகத்தின்

159 பூமரமே முந்துளைத்த போர்வாளி புன்குயில்வாழ்
மாமரமொன் றுந்துளைக்க மாட்டாதோ—சேமலைந்து

160 மாவாய் பிளந்த மரகதமே வம்புரைபபார்
நாவாய் பிளந்தா னகையாமோ—பூவாய்த்த

161 தூய குருந்தொசித்த தோளாய் செவிவெதுப்பு
மாயர் குழலொசித்தா லாகாதோ—மாயமாய்க்

162 காதிச் சுழல்காற்றைக் காய்ந்தநீ வாடையாய்
வாதிச் சுழல்காற்றை மாற்றாயோ—மோதிவரும

163 மண்ணாறு நீங்க வழிகண்ட நீயெனது
கண்ணாறு நீங்கவழி காட்டாயோ—தண்ணார்ந்த

164 தாதுதிரும் பைந்துழாய் தாராயேற் கண்ணனென
வோது திரு நாமமா சுண்ணாதோ—வீதிருக்க

165 நீநெடுமா லானநிலை நின்சே வடிதொழுது
நானெடுமா லாகவோ நம்பியே—மாநிலத்துப்

166 பாவையர்கைச் சங்கம பறிப்பதற்கு நின்சங்கந்
தீவகமோ நேமித் திருமாலே—மேவத்

167 திருக்கடைக்கண் சாத்தாய் திருவாய் மலரா
யருட்கடலே யென்று மளவின்—மருக்கமலை

---

158. முந்நீர்-கடல். கையமைத்துக கடல்வாயடங்கச் செய்தது இராமாவதாரத்தில். இது, "வென்வேற் கௌரியர் தொன்முது கோடி, முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை, வெல்போரிராம னருமறைக் கவித்த, பல்வீழாலம்போல, வொலியவிந்தன்றிவ் வழுங்கலூரே" என அகநானூற்றிலும்(செய்-எஉ) "மாயோ னடக்கு, நெடுங்கடல் போலடங்கி நிற்க" "இமைக்குங் கடலெழிலேகாந்தாம, னமைக்குங் கடல்பார்த் தமர்ந்தீர்" எனத் தேவையுலாவிலும் (கண்ணி-கக, கஅ,) பயின்றுள்ளது.

159. வாளி-அம்பு. சே-எருது.

162. மாயமாய்ச் சுழல்காற்றைக் காதிக்காய்ந்த நீ எனக் கூட்டுக. உழல் காற்று - உழல்தற் கேதுவாயிருக்கும் (அதாவது வருத்தும்) காற்று.

163. கண்ணாறு— கண்ணிலிருந்து பெருகும் நீர்ப்பெருக்கு .

164. கண்ணன் - திருமால். இது சிலேடையால், கண்ணோட்டமுடையவனென்னும் பொருளை யுணர்த்திற்று.

165. நெடுமால்-1. திருமால், 2 பெரியமயக்கம்.

166. தீவகம்-இணக்குப்பார்வை. (பார்வைமிருகம்.)

168 நாதன் சிரித்தே நகைகோட்டி வெண்கோட்டு
மாதங்க மீதே மறைதலாற்—சீதரன்றன்

169 வையம் புதைக்கு மலர்கருதி மாரவே
ளெய்யம்பு தைக்கு மிலக்கானேன்—செய்யநிறப்

170 பீதகவா டைக்கும் பெரிய திருவரைக்கும்
பாதகவா டைக்கும் பரிவானே—னாதலா

171 லந்திக் கமல னணையுங்கொ லென்றிருந்தே
னந்திக் கமலத் துளமானேன்—கொந்துற்ற

172 கொய்துழாய் மார்பகலங் கூடுங்கொ லோவெனவே
கைதுழாய் மண்சுழித்துக் கைசோர்ந்தே—னெய்தி

173 யயனாலுங் காண வரியான் கரிய
புயனாலுங் காணமால் பூண்டேன்—வயமாரன்

174 றூதை திருப்பவளந் தான்வேட் டிளந்தென்ற
றூதை திருப்பவள மொல்கினேன்—மாதுவரை

175 யாயன் பவனிதொழு தன்றுமுத லின்றளவுந்
தூய நயனந் துயினீங்கி—யாயொறுக்கப்

176 பந்து கழன்மறந்து பாவை கிளிதுறந்து
சந்து பனிநீர் தனைத்தகற்றி—வெந்துயராய்ப்

177 போதக் கலனிழந்து பூவிழந்து நீரிழந்து
காதற் சிறையிருத்தல் கண்டாயே—மாதுளபத்

178 தாரானை வேட்கையெல்லாந் தந்தானை மும்மதமும்
வாரானை யன்றழைக்க வந்தானைக்—காரான

179 மெய்யானை யன்பருக்கு மெய்த்தானைக் கண்கைகால்
செய்யானை வேலையணை செய்தானை—வையமெலாம்

---

168. நகைகோட்டி-சிரித்து. கோடு-கொம்பு. மாதங்கம்-யானை.

169 வையம் புதைக்குமலர் - உலகினை யுள்ளடக்கின தாமரைமலர்போலுந் திருவடி. கருதி-நினைத்து.

170. பீதக ஆடை—பொன்னுடை. பாதகவாடை-கொடிய வாடைக்காற்று.

171. அந்தி-மாலைக்காலம். அமலன்-மலமற்றவன். உளம்-மனது. கொந்து-பூங்கொத்து.

172. மண்சுழித்தல்-கூடலிழைத்தல்.

174. திருப்பவளம்-அழகிய பவளம் போலும்அதரம். ஒல்குதல்-சுருங்குதல்.

175. யாய்-தாய். ஒறுத்தல்-தண்டித்தல்.

178. வார்தல்—ஒழுகுதல்.

180 பெற்றானைக் காணப் பெறாதானைக் கன்மழையிற்
கற்றானைக் காத்ததொரு கல்லானை—யற்றார்க்கு

181 வாய்ந்தானைச் செம்பவள வாயானை மாமடியப்
பாய்ந்தானை யாடரவப் பாயானைப்—பூந்துவரை

182 மாமாலைக் கண்டந்தி மாலைவரு முன்னமே
தேமாலை வாங்கநீ செல்லுங்கால்—பூமாயன்

183 முன்னந் தடுத்த முளரித் திருக்கரத்தா
லின்னந் தடுக்குமென வெண்ணாதே—நின்னுடைய

184 நீர்முழக்கின் மிக்கதெனச் செங்கண்மால் கைச்சங்கின்
வாய்முழக்கங் கேட்டு மயங்காதே—நீமருவும்

185 வானச் சிலையின் வனப்புளதென் றெம்பெருமான்
கூனற் சிலைகண்டு கூசாதே—மேனிலத்து

186 மின்சோதி யெல்லாம் விழுங்குமென்று நாந்தகத்தின்
நன்சோதி கண்டுமிக நாணாதே—நி[illegible]ாதி

187 மையழகி னீல மணியழகி லெம்ம[illegible]றன்
மெய்யழகு நன்றென்று வெள்கா[illegible]—துய்யமணி

188 யாரக் கபாட மணிக்கோயில் வா[illegible]ஞ்
சேரக் கடந்து திருமுன்போய்த்—[illegible]த்தில்

189 நின்று வணங்கி நெடிதேத்தி வாய்பு[illegible]துச்
சென்று பெருமான் றிருச்செவியிற்—றுன்[illegible]

190 றையற் கரசேயுன் றூர்வேட் டொருபேதை
மையற் கரைசேரு மாறறியாண்—மெய்யுருகிக்

191 கொம்பனையா ளோர்விரகங் கொண்டா ளது தன்னை
யெம்பெருமான் கேட்டருளா யேதென்னி—லம்பரமு

192 மட்புலனு முண்டுமிழ்ந்த மாயோ னுருவமலாற்
கட்புலனும் வேற்றுருவங் காணற்க—புட்புறத்து

---

180. கற்றான்-கன்றோடுகூடிய பசு. இது, சாதியொருமை. கல்லான்—கோவர்த்தனத்தைக்குடையாகவுடையான்.
183. முளரி-தாமரை.

185. வனப்பு—அழகு.
186. நாந்தகம்-வாள்.
188. கபாடம்—கதவு.

94 [illegible]
[illegible]

195 கங்கை புலவுங் கழனிறுற் கல்லாதென்
செங்கை தலைநிசைபோய்ச் சேறக—பங்கயத்தா

196 டாக்குந் திருத்துழாய்த் தாமமண மல்லாதென்
மூக்கும் பிறிதுமண மோவற்க—மாக்கடல்போ

197 லஞ்சன வண்ண னடிக்கமல மல்லாதெ
னெஞ்சமு மொன்றை நினையற்க—செஞ்சுணங்கோ

198 டிங்கெழுந்த கொங்கை யெழுபிறப்பு மெம்பெருமான்
கொங்கணைந்த தோளல்லாற் கூடற்க—மங்கைநல்லீ

199 ரென்று வருநதி யிருந்தா ளவளுக்குன்
மன்றல் கமழ்தார் வழங்கென்று—நின்றிரந்து

200 பண்டுளவத் தாமரையாள் பற்றுந் திருமார்பின்
வண்டுளவத் தார்வாங்கி வா.

செங்கமல வயல்சேருந் திருநறையூர் வாழியே
சீராரு நம்பியிணைத் திருவடிகள் வாழியே
பங்கமறு மேதாவி பயந்தசெல்வி வாழியே
பாரின்மறை தென்சொல்லாற் பகுத்துரைப்போன் வாழியே
யெங்களெதி ராச னிணைமலர்த்தாள் வாழியே
யீடில்வர வாமுனிவ னெப்பொழுதும் வாழியே
செங்கைகுவித் தன்போடு சேவிப்போர் வாழியே
செப்புவோர் வாழிசெவி சேர்ப்போரும் வாழியே.

---

196. தாமம்—அலை.
197. னெஞ்சு—[illegible]
198. கொங்கு } —[illegible]
199. மன்றல் }

